# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.88/2025

### அ.சா. 4 (LW 5 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு. நேரு** | **தொழில்** | |
| **த/ பெயர்** | கருப்புச்சாமி | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **20.07.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 மற்றும் 3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது திண்டுக்கல் செல்லாண்டியம்மன் கோவில் தெருவில் குடியிருந்து வருகிறேன். விறகு கடை வைத்துள்ளேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கில் இறந்த சூர்யபிரகாஷ் என் தாத்தாவின் தம்பி மகன் ஆவார். கடந்த 7 வருடம் முன்பு பாண்டியன் மகனை யாரோ வெட்டி விட்டதாக விசயம் கேள்விப்பட்டு திண்டுக்கல் பெரியாஸ்பத்திரி போய் பார்த்தேன், அப்போது இரவு 10.00 மணி இருக்கும். நான் போய் பார்த்த போது இறந்தவர் பிணவறையில் இருந்ததாக சொன்னார்கள், நான் பார்க்கவில்லை. வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள 2வது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.2.** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகாரை இறந்தவரின் தகப்பனார் பாண்டியன் சொல்லச் சொல்ல விக் என்பவர் எழுதினார், அப்போது நான் காவல் நிலையத்திற்கு வெளியில்தான் நின்றிருந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

போலிசார் என்னை சூர்யபிரகாஷ் இறந்த மறுநாள் விசாரித்தார்கள். போலிசார் விசாரணையில் புகாரை யார் எழுதினார்கள் என்று பெயரை குறிப்பாக சொன்னேனா என்றால் சொன்னேன். நான் கையெழுத்து செய்த பேப்பரில் என்ன விவரங்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சாட்சி கையெழுத்தை போலிசார் கேட்டுக் கொண்டதால் போட்டேனா என்றால் ஆமாம்.

**2,3 எதிரிகள் தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்வதாக வழக்கறிஞர் தெரிவித்தார்.**

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.07.21 20:44:47 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.